பதிவு எண் : M 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.லிட்.

மலர் : 15] சென்னை : மாசி 23 (6–3—68) புதன் ★ வெளியூர் : மாசி 24 (7–3—68) வியாழன் [இதழ் : 220

அஞ்சலகத்திலும் அளவு முறை!

மவுண்ட்ரோடு நிலையத்தில் உள்நாட்டு உறை பஞ்சம்!

நேற்று முதல் மவுண்ட்ரோடு அஞ்சல் நிலையத்தில் உள்நாட்டுக் கடித உறைகள் (இன்லண்டு லெட்டர்) அளவுப்படிதான் விற்பனைக்குத் தரப்படுவதாக இன்றையத் தகவலொன்றின்படித் தெரியவருகிறது. அனைவருக்கும் கிடைக்கும்படிச் செய்வதற்

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டமன்றத்தில்..!

[போகாத நிருபர்]

'பலா' சுவைக்குமென்றாலும், அதனைத் தேனில் தோய்த்தெடுக்கும்போது இனிப்பு இன்னும் பன்மடங்கு உயருகிறதல்லவா ?

அண்ணா அவர்களின் கைவண்ணம்பட்டு சுவைக்கும் 'பட்ஜெட்'டினை, தேனில் தோய்த்த 'பலா' வாக ஆக்கியிருக்கிறார் — தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி.!

குற்றால அருவியின்கீழ் நின்றுகொண்டிருக்கையில், வேறு எதிலாவதா சிந்தனையைச் செலுத்திக் கொண்டிருப்பது ?

பல காலமாக, உண்மையான கூட்டாட்சித் தத்துவத்துக்கு ஆசைப்பட்டுவரும் ம.பொ.சி., அந்த விருந்து அண்ணாவின் நிதிநிலை அறிக்கையில் முழு அளவு—ஆனால் அஜீரணத்தினை ஏற்படுத்தாத வகையில் இருப்பதனைக் கண்டு—உணர்ந்து—சுவைத்து—அனுபவித்து மகிழ்ந்திருக்கிறார்!

அவரே பலமுறை, 1967-ல் நடைபெற்ற தேர்தல் கூட்டங்களில் கூறியிருப்பதனைப்போல், 'காங்கிரசுக்காக உழைத்ததில் ம. பொ. சி.-யின் காலெலும்பும் தேய்ந்திருக்கிறது! பின்னர், அதே காங்கிரசாட்சியின்போதுதான் அவருக்கு தீராத வயிற்று நோயும் வந்தது!'

அத்தகைய ஓர் அரசியல்வாதி, 'தந்தையின் காலத்தில் பாகிஸ்தான் பிரிந்ததுபோல், மகளின் ஆட்சியில் தமிழகம் பிரியும் நிலையை ஏற்படுத்திவிடவேண்டாம்' என்று, அக்கறையினால் உந்தப்பட்டுப் பேசியிருப்பதனை—இங்கிருக்கும் காங்கிரசுக்காரர்கள் பொருட்படுத்தவில்லையென்றாலும்—'அங்கே' இருப்பவர்கள் செவிமடுக்கவேண்டும்!

"தி.மு.க.-வின் மனத்தூய்மையை நம்புங்கள்; இந்திய ஒற்றுமைக்கு அந்த அமைப்பு கூறும் வழிகளுக்கு இசையுங்கள்" என்று ஏற்கனவே கவர்னர் உரைமீது பேசுகையில், ம.பொ.சி. அவர்கள் தெரிவித்த முன்னுரையின் தொடக்க உரையாகத்தான் மேற்கண்ட கருத்துரையும் அமைந்திருக்கிறது!

சொற்சுவைக்குப் பெயர் பெற்ற ம. பொ. சி. அவர்களே, நிதி நிலை அறிக்கையில் காணப்படும் வார்த்தை நயங்களை வியந்து பாராட்டியிருக்கிறார் என்றால், 'பட்ஜெட்'டில் காணப்படும் வரிகளுக்கு வேறு உரைகல் தேவையில்லை!

> "முதலமைச்சர், வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, 'மத்திய—மாநில அரசு மோதல்' என்ற எண்ணம் வராமல்—உண்மை நிலையை மட்டும் துணிவோடு—பண்பு கலந்த சொற்களால் எடுத்துரைத்திருக்கிறார்"

என்ற ஒரு கருத்தாழமிக்க பாராட்டு, ம. பொ. சி. அவர்களிடமிருந்து கிடைத்திருக்கிறது.

நிதி நிலை அறிக்கையில் காணப்படும் சொல் நயத்தினை வியந்திருக்கும் ம. பொ. சி., தமது உரையிலும் சொல் நயத்தினைக் கொடுக்கத் தவறவில்லை!

"மத்திய அரசுக்கு இந்த மாநிலம் கொடுக்கவேண்டிய கடன் தொகை வளர்ச்சிகளையும், வட்டி விகித உயர்வுகளையும் நிதி நிலை அறிக்கையில் காணும் எந்த ஒரு சாதாரண மனிதனும், 'அது என்ன—மத்திய அரசா அல்லது மார்வாரிக் கடையா?' என்று கேட்கவே செய்வான்" என்று இதே பகுதியில் ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது!

இதையே ம. பொ. சி. அவர்கள், இன்னும் மேம்பாடாக—சூடாக—ஆனால் பண்போடு—'**அரசியல் அநாகரிகம்**' என்று விளித்திருக்கிறார்!

கடன் வழங்கும் பிரச்சினையில் மத்திய அரசு கடைபிடித்துவரும் விரும்பத்தகாத போக்கினை ஒரு பெயரிட்டழைப்பதற்கு ம. பொ. சி. அவர்கள், அருமையான பெயர் ஒன்றினை அரசியல் விமர்சகர்களுக்கு அளித்திருக்கிறார்!

"எங்கள் தலைவர், 'உங்கள் ஆட்சியைக் கவிழ்ப்பேன்' என்றா சொன்னார்? 'காப்பேன்' என்றல்லவா கூறினார்?"—என்ற வகையில், மேலவையில்கூட சில நாட்களுக்கு முன்னர், காமராசர் பேசிய இராணுவம் பற்றிய பேச்சு விவாதிக்கப்பட்டது. இத்தொடபில் காமராசர் அண்மையில், 'இந்த ஆட்சியை மத்திய அரசு கவிழ்க்க முனையுமானால், அதற்கு இடந் தராமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டிருப்பதனை எடுத்துக்காட்டி, 'ஒரு தனி மனிதன் காப்பாற்றக் கூடிய தலையெழுத்தா தமிழகத்துக்கு?' என்று ம. பொ. சி. கேட்டிருப்பது, காங்கிரசுத் தரப்பினருக்கு நாணத்தினைக் கொடுத்திருக்கவேண்டும்!

கூட்டாட்சி என்ற போர்வையில், மத்திய—மாநில அரசுகளுக்கிடையே ஆண்டை—அடிமைப் போக்கு இருப்பதனை, துணிவோடு எடுத்துரைத்தும் முதலமைச்சருக்கு உளப்பூர்வமான பாராட்டு வழங்கியிருக்கிறார் ம. பொ. சி.

'வெள்ளை யானை' என எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படும் 'பொகாரோ' கைவிடப்படவேண்டும்—என்று தென்னக முதலமைச்சர்கள் கூடி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, 'அதற்குப் பதிலாகத் தென் மாநிலங்களுக்கு மூன்று இரும்பாலைத் திட்டங்களைப் பெறவேண்டும்' என்பதும், 'இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு ஒரு தனித் துறை ஏற்படுத்தவேண்டும்' என்பதும், 'நெடு நாட்களாக இருந்துவரும் ஆசிரியர் பிரச்சினைகள்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப்படவேண்டும்' என்பதும், பாராட்டுதல்களுக்கிடையில் ம. பொ. சி. தெரிவித்திருக்கும் கோரிக்கைகளாகும்.

'இனிப்பு' மட்டும் அல்ல—'விருந்து' சுவைக்க சிறிது 'கார'த்தையும் அவர் கொடுத்திருக்கிறார்.

★

'சனநாயகம்' என்ற பெரிய பெயரினைக் கூறி, 'அதற்கே ஆபத்து வந்துவிட்டதாகக் கூறினாலாவது தங்கள் பக்கம் கவனம் திரும்பாதா—கருணை பிறக்காதா' என்ற தமிழகக் காங்கிரசாரின் பிரச்சார தந்திரங்களுக்கு, தக்க பதில்களை, சட்டமன்ற மேலவையில் நேற்று சி. பி. சிற்றரசு தந்திருக்கிறார்!

'விமர்சிக்கவேண்டுமே—குற்றங்கள் ஏதாவது கூறவேண்டுமே' என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் காங்கிரசு உறுப்பினர்களின் நிதிநிலை அறிக்கைபற்றிய பேச்சு இருப்பதனை சி. பி. சிற்றரசு சுட்டிக் காட்டியிருக்கிறார்!

நீண்ட நாட்களாக அடித்தளத்தில் இருந்த மக்களின் பிரச்சினையில்—புறக்கணிக்கப்பட்ட வகுப்பினர் பிரச்சினைகளில் கழக அரசு கவனம் செலுத்திவருவதைப் பாராட்டியிருக்கும் அவரது உரை, ஆட்சிமாற்றத்தால் உருவாகியிருக்கும் நன்மைகள் நிதி நிலை அறிக்கையிலிருந்து தெரியவருகிறது என்பதனை, வேறொரு வகையில் எடுத்துக்காட்டியிருக்கிறது!

★

நிதி நிலை அறிக்கைமீது சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் ஐந்தாம் நாளாக நேற்று கழக உறுப்பினர்கள் எட்டு பேர் பங்குபெற்றிருக்கின்றனர்.

அரசுக்குக் கூடுதல் வருமானம் வரக்கூடிய யோசனை ஒன்றினை **எஸ். துரைசாமி** தந்திருக்கிறார்; 'அரசினருக்குச் சொந்தமாக பாதையோரங்களில் இருக்கும் புளிய மரங்களின் குத்தகைத் தொகையினை 50 காசுகளிலிருந்து 75 காசு முதல் இரண்டு ரூபாய் வரையில் உயர்த்துவதன் மூலம் மட்டும் கூடுதல் வருமானமாக ரூ. 2 கோடி கிடைக்கும்' என அவர் கொடுத்திருக்கும் புள்ளி விவரம் பாராட்டுதலுக்கும், கவனத்துக்கும் உரிய ஒன்றாகும்!

"தார்மீக ரீதியில் ஒழுங்கில்லாத ஒன்று, அரசியல் ரீதியில் ஒழுங்கானதாகி விடாது" என்று காந்தியடிகள் கூறியிருப்பதனையும் மறந்து, 'கூடுதல் நிதி' என்ற காரணம் காட்டி—கள்ளுக்கடைகளை ஆங்காங்கே காங்கிரசு நிர்வாகங்கள் திறந்து கொண்டிருக்கும்போது, இங்குள்ள காங்கிரசுக்காரர்கள், 'லாட்டரிச் சீட்டு முறையைக் கேலி பேசுவது என்ன நியாயம்'—எனக் கேட்டிருக்கிறார் **எம். இராசாங்கம்.**

கிழக்கு இராமநாதபுரத்தின் சாலை வசதிகள் பற்றிக் கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்—**எஸ். சேதுராமன்.**

மொழிப் பிரச்சினையைத் தமிழக அளவில் தீர்த்திருக்கும் கழக அரசின் திறமையைப் பாராட்டி உரையாற்றி யிருக்கிறார்—**எஸ். ஆறுமுகம்.** மத்திய அரசிடம் மட்டுமே பெரும்பான்மை அதிகாரங்கள் இருக்கும் உண்மையைக்கூட, 20 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்தவர்கள் எடுத்துச் சொல்ல

(4-ம் பக்கம் பார்க்க)

கலவரம் மூளாமல் காவல்துறையினர் அமைதி காத்தனர்

மதுரைச் சம்பவம் தொடர்பாக இரு வழக்குகள் பதிவாகியுள்ளன

மாவட்ட ஆட்சித் தலைவரும் அமைதி காக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்

சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 6—

கடந்த 4-ந் தேதியன்று, மதுரையில் நடந்த சம்பவங்கள் குறித்து, சுதந்தராக் கட்சி உறுப்பினர் திரு. சீமைச்சாமி இன்று சட்டமன்றத்தில் விவாதிக்கக் கோரி, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

"சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. எஸ். முத்து அவர்களை நூற்றுக்கு மேற்பட்டோர் வழிமறித்து அவரை அவதூறாகப் பேசியும், கற்களை அவர்மீது வீசியதுடன் அவர் கார்மீதும் வீசிச் சேதப்படுத்தியும், 'முத்து ஒழிக' என்று கூச்சலிட்டும் கலவரம் விளைவித்ததனால், 'தமது உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டது' என்று திரு. முத்து அவர்களே அறிக்கை மூலம் தெரிவித்திருப்பது குறித்து விவாதிக்க வேண்டும்" என்று திரு. சீமைச்சாமி தமது தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதேபோல் காங்கிரசுக் கட்சிச் சார்பில், கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடாரும், கே. இராமமூர்த்தியும் சேர்ந்து வேறு ஒரு தகவலின்மீது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருந்தனர். அவர்கள் கட்சியைச் சேர்ந்த சிலர் தாக்கப்பட்டதாக அந்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

"மதுரையில் நடந்த சம்பவங்கள் குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டோ அல்லது பதிவு செய்யப்படும் நிலையோ உள்ளதால், நீதிமன்ற நடவடிக்கைகளைப் பாதிக்கும் அளவில் அதுபற்றி எவ்விதக் கருத்தும் தெரிவிக்கக்கூடாது" என்று அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் கூறினார்.

அவை முன்னவரான அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பின்வருமாறு விளக்கமளித்தார் :—

"அன்றாட நிர்வாக நடவடிக்கைகளினால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்படுமானால் தான், அதைப்பற்றி இங்கு விவாதிக்க—அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் ஏற்படும்; இப்போது அப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை.

"மதுரையில் நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவங்கள் தொடர்பாக சட்டத்துக்குட்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

"அங்கு, போலீசு இன்ஸ்பெக்டர் தலைமையில் போலீசார், அமைதி ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்; கலவரம் ஏற்படாமல் சமாளித்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்திருப்பார்களேயானால், பெரியதொரு கலகமே மூண்டிருக்கும்.

"இரு கட்சிச் சார்புடையவர்களும் நீதிமன்றத்திற்கு வந்திருந்ததால், அவர்களுக்கிடையே மோதுதல் ஏற்படாதவாறு போலீசார் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

"மேலும். மதுரைச் சம்பவம் தொடர்பாக வேலு என்பவர் மீதும், அவரைச் சேர்ந்தவர்கள்மீதும் ஒரு வழக்கும், நெடுமாறன் மற்றும் சிலர்மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி அமைதி ஏற்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டிருக்கிறார்.

"எனவே, இதுபற்றி விவாதிக்க, இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்."

"இதற்குமேல் இதுபற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை" என்று அவைத் தலைவர் தீர்ப்பளித்தார்.

சென்னை, மார்ச் 5—

பிப்ரவரி 24-ம் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச் செலவு மூன்று புள்ளி குறைந்து 701-ல் நின்றது.

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 மாசி 23 (6—3—68) புதன்

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டம்

[2]

இன்றையத் தமிழக அரசின் சாதனைகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது, உணவுத் துறையில் அது பெற்றிருக்கின்ற முழு வெற்றியாகும், 1966—67-ல் பெய்த மழையின் அளவு—மொத்தத்தில் மழை பெய்த நாட்களின் எண்ணிக்கை 1967—68-ல் குறைவாக இருந்திட்டபோதிலும், சென்ற நிதி ஆண்டைவிட நடைமுறை ஆண்டில் மொத்தத்தில் 2 இலட்சம் டன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் இன்றைய அரசு வெற்றி கண்டிருக்கிறது. இதுபற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள், நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை இங்கு தருகிறோம் :—

"இத்தகைய இடையூறான பருவ நிலைகள் வாய்த்தபோதிலும், நடப்பு ஆண்டில் உணவுத் தானிய உற்பத்தி 1966—67-ம் ஆண்டின் உற்பத்திக்குமேல், 2-இலட்சம் டன் உயர்ந்து ஏறக்குறைய 60 இலட்சம் டன் அளவில் நிற்குமென்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும்.

"நடப்பு ஆண்டில், பொதுவாக 1965—66-க்கு நேர் என்று சொல்லத்தக்க பருவ நிலை அமைந்துள்ளது. அவ்வாறு 1965—66 உடன் ஒப்பிட்டு நோக்கின், நடப்பு ஆண்டின் உற்பத்தி 7.4 இலட்சம் டன் உயர்ந்திருக்கிறது. இந்த உற்பத்தி உயர்வு, நடப்பு ஆண்டில் அரசு மேற்கொண்டுள்ள குறிப்பான திட்டங்களின் வாயிலாகக் கிட்டியுள்ள பலன்களை, முற்றும் எடுத்துக்காட்டுகிறது என்று சொன்னால் மிகையாகாது."

இன்றையக் கழக அரசு செயல்படுத்திய சிறந்த திட்டங்களின் காரணமாக, உணவுத்தானிய உற்பத்தி கூடி இருக்கிறது என்பது நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

எனவே, 'இவ்வாண்டில் மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டத்தின்கீழ் கிடைத்துள்ள பலன்களினால் ஊக்கமடைந்து, அத்திட்டத்தில், நெல் விளைச்சலின்கீழ் நடப்பு ஆண்டில் இருந்த 13 இலட்சம் ஏக்கர் பரப்பளவை, அடுத்த ஆண்டில் 25 இலட்சம் ஏக்கர் அளவுக்கு உயர்த்த அரசு கருதுகிறது.'

அடுத்த ஆண்டில் நெல் விளைச்சலைப் பெருக்க முடிவுகட்டி இருப்பது போன்றே, வேறு கலப்பினச் சிறு தானிய உற்பத்தியைப் பெருக்கவும் இன்றைய அரசு தீர்மானித்திருக்கிறது.

இதற்காக, 'கலப்பினச் சிறு தானிய விளைச்சலின் கீழுள்ள நிலப் பரப்பும், நடப்பு ஆண்டில் ஏறக்குறைய 1-இலட்சம் ஏகரிலிருந்து அடுத்த ஆண்டில் 1.7 இலட்சம் ஏகருக்கு உயர்த்தப்படும்'

என நிதி நிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

இப்படி நெல் உட்பட பலவகையான உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்குவதில் நடப்பு ஆண்டில் வெற்றி கண்டுள்ள தமிழக அரசு, உணவுத் தானியக் கொள்முதல் செய்து சீராக மக்களுக்கு வழங்குவதிலும் பாராட்டத்தக்க வெற்றியைக் கண்டிருக்கிறது. இதுபற்றி நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத்தக்கது :—

"உணவுத் தானியக் கோள்முதல் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தியதன் வாயிலாக, தானியங்கள் இடையீடின்றி வழங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்க முடிந்தது."

தேவையான அளவுக்குக் கொள்முதல் செய்து, மக்களுக்குச் சீராக வழங்குவதில் மட்டுந்தான் இன்றைய அரசு வெற்றி கண்டிருக்கிறது என்பதில்லை. மற்ற மாநிலங்களில் வெளி அங்காடியின் தானிய விலை கூடுதலாக இருந்து வந்திருப்பதைப் போலல்லாமல், நியாயமான விலையில் கட்டுப்படுத்துவதிலும், இன்றைய அரசு முன்னணியில் இருக்கிறது; இதுபற்றி நிதி நிலை அறிக்கை கூறுவதாவது :—

"நாட்டின் வேறெந்தப் பகுதியையும்விட, உணவுத் தானி[illegible] யங்களின் [illegible] அங்காடி விலை, நமது மாநிலத்தில் நியாயமான அளவில் நிலைபெற்றுள்ளது."

தொழில் திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்களின் வளர்ச்சி அனைத்தும், உணவுத் தானிய உற்பத்திப் பெருக்கத்தையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டிருப்பதாகும். உணவு உற்பத்தியைப் புறக்கணிக்கின்ற முறையில் மேற்கொள்ளப்படக் கூடிய தொழில் திட்டங்கள்—எவ்வளவு இன்றியமையாததாக இருந்திட்டாலும்—வளர்ச்சி பெற்று, மக்களுக்கு நற்பயனை அளிக்கும் என எதிர்பார்க்க முடியாது. அத்தகைய திட்டங்கள் பல்வித இன்னல்களுக்கு மக்களை உள்ளாக்கும்.

திட்டமிட்ட தொழில் வளர்ச்சியில் அடங்கி இருக்கின்ற இப்பேருண்மையைத் தெளிவாகத் தெரிந்திருக்கின்ற இன்றையத் தமிழக அரசு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் நடப்பு ஆண்டில் கருத்துச் செலுத்தி, அடுத்த ஆண்டிலும் அதற்கு முன்னுரிமை வழங்கி, போதிய நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

1968—69-ம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடுகளில், கல்விக்காக இன்றையத் தமிழக அரசு 56 கோடியே 28 இலட்ச ரூபாயைச் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. இப்பெருந்தொகை இம்மாநில வருவாயில் 23 சதவிகிதமாகும்.

கல்விக்காகச் செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற இப்பெருந்தொகையில், கல்லூரிப் படிப்பு சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

"உயர்நிலைக் கல்வித் துறை பெரிதும் விரிவடைந்திருப்பதன காரணமாக, கல்லூரிகளில் சேருவதற்கு மாணவர்கள குவிந்தவண்ணமிருக்கின்றனர். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காகப் புதிய கல்லூரிகளைத் திறப்பதன் மூலமாகவும், ஏற்கனவே உள்ள கல்லூரிகளில் மாணவர்களின எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலமாகவும் அரசு முயற்சி எடுத்திருக்கிறது. புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்குப் பொதுமக்கள் வழங்க வேண்டிய நன்கொடைத் தொகை பற்றி அரசு விதித்துள்ள விதிமுறைகள் நிறைவேற்றப்படுகின்ற இடங்களில் 6 புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்கு 1968 69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, திண்டுக்கல், செய்யாறு ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புகளைத் திறப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது."

பின்தங்கியவர்கள்—அரிசனங்கள் இவர்களின் நலனுக்காகத் தமிழக அரசு, அடுத்த ஆண்டுக்கு 6-கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவிட இருக்கிறது. இத்தொகையை எப்படிச் செலவிடப் போகிறது இந்த அரசு? அதுபற்றிய விளக்கத்தை, நிதி நிலை அறிக்கையில் கீழ்க்கண்டவாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள் :—

"உதவிச் சம்பளம் வழங்குதல், வீட்டு மனைகளைக் கையகப்படுத்துதல் போன்ற தற்போதையத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதைத் தவிர, அரிசனங்கள் புதிய தொழில்களிலும், வாணிபத்திலும் ஈடுபடுவதற்குத் துணையாக அவர்களுக்குக் கடன்கள் வழங்கும் ஒரு திட்டத்தை [illegible] ஆண்டிலிருந்து அரசு தொடங்கிவைக்கக் கருதுகிறது. இதற்கென ஒரு இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாதனைகளையொட்டி, இனி வருகிற ஆண்டுகளில் இது மேலும் விரிவுபடுத்தப்படும்."

அரிசனங்களுக்கு நிலையான வாழ்வளிக்கக்கூடிய இந்தக் கடன் பெறுகின்ற ஏற்பாட்டை அவர்கள், மிக்க பொறுப்புடனும் செயல்படுத்தி வாழ்க்கையில் வெற்றி காண வேண்டும் அதைப் பொறுத்துத்தான், மேற்குறித்த தொகையின் அளவு ஆண்டுக்கு ஆண்டு கூடுவதற்கும், கூடுதலாக அரிசனங்கள் அவ்வுதவியைப் பெறுவதற்கும் இடமேற்படும்.

இத்துடன், இத்தொகையிலிருந்து பின்வருமாறு செலவிடுவதற்கும் அரசு முடிவுகட்டி இருக்கிறது :—

"அரிசன நலத்துறை நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் எல்லாச் சிறுவர்களுக்கும், ரூ. 3.8 இலட்சம் செலவில், ஒரு தொகுதி சீருடை வழங்க வேண்டும் என்றும், அரிசன மாணவர் விடுதிகளில் ஒவ்வொரு மாணவருக்கும் உரிய விடுதிச் செலவை உயர்த்தித் தருவதற்காக ரூ. 4.3 இலட்சம் கூடுதல் செலவு செய்வதற்கும் இப்போது அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

—கா. க.

தமிழகத்தில் இரயிலையே பார்க்காதவர்கள்

சென்னை, மார்ச் 5—

இன்று சட்டமன்றத்தில், புதிய இரயில்பாதை அமைப்புக் குறித்துக் கேள்விகள் எழுந்த நேரத்தில் காங்கிரசு உறுப்பினர் ஒருவர் எழுந்து,

"இரயிலே புகாத மாவட்டம் எங்கள் மாவட்டம்; எங்கள் மாவட்டத்து மக்கள் இரயிலைப் பார்க்க வேண்டும் என்றால் கண்காட்சியில்தான் பார்க்கவேண்டும்"

என்று கூறி, தமது மாவட்டத்துக்கு இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை வற்புறுத்துமாறு கோரினார்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மகாதேவ பிள்ளை தான் அந்த உறுப்பினர்!

நெல்லை—குமரி இரயில் பாதை அமைக்கும் திட்டம் நெடுங்காலமாக மத்திய அரசினால் தட்டிக்கழிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரிந்ததே!

உலகப் பொருட்காட்சியில் தமிழக அரங்கு

சென்னை, மார்ச் 5—

"சென்னையில் நடைபெற்றுவரும் உலக வாணிப தொழிற் பொருட்காட்சியில் தமிழக அரசு ரூ. 15 இலட்சம் செலவில் தனி அரங்கு ஒன்றினை அமைத்திருக்கிறது"

என்று திரு. கே. வினாயகம் கேள்விக்குத் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளித்தார்.

பருப்பு வகை உற்பத்தியிலும் தன்னிறைவு பெறும் திட்டம்

உணவு கமிஷனர் இராயப்பா தலைமையில் தமிழகத்தில் ஆய்வுப் பணி

சட்டமன்றத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு— மத்திய அரசின் போக்கிற்குக் கண்டனம்

சென்னை, மார்ச் 5—

"கொண்டைக் கடலை மற்றும் பருப்பு வகைகளை தமிழ் நாட்டிலேயே விளைவித்து, தன்னிறைவை ஏற்படுத்துவதற்காக, நமது மாநில உணவுக் கமிஷனர் திரு. இராயப்பா தலைமையில் ஆராய்ச்சி நடத்தி, வட ஆற்காடு மாவட்டத்திலும் இன்னும் சில இடங்களிலும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன"

என்று உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

கேள்வி நேரத்தின்போது கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதிலளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது :—

"இந்த மாநிலத்திலிருந்து கேரளத்துக்கு அரிசி தரவேண்டும் என்று வற்புறுத்தும் மத்திய அரசு, வட மாநிலங்களில் விளையும் பருப்பு வகைகளைத் தமிழ் நாட்டுக்கு அனுப்ப வற்புறுத்த மறுக்கிறது. வெளி மாநிலங்களுக்குப் பருப்பு வகைகளைக் கொள்முதல் செய்வதை அந்த மாநிலங்கள் தடுக்கின்றன. நமது வியாபாரிகளுக்குள்ள தடை இதுதான். இதற்கு லைசென்சு ஒன்றும் வழங்கத் தேவையில்லை.

"முதலமைச்சர்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது, இரண்டு முறை இதுபற்றி மத்திய அமைச்சரிடம் அழுத்தந் திருத்தமாக வலியுறுத்திச் சொல்லிவந்திருக்கிறேன். மேலும் அரியானா, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு முன் நமது அதிகாரி சென்று பேச்சு நடத்திவிட்டு வந்திருக்கிறார். உத்தரப் பிரதேசத்திலிருந்து கூட இப்போது ஓரளவு தர ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; தடையையும் நீக்கியிருக்கிறார்கள். மத்திய அரசு சில சட்டங்களை நீக்காததால் சில சங்கடங்கள் இருக்கின்றன.

"நாம் பருப்பு வகைகளில் தன்னிறைவு பெறும் முயற்சியை மேற்கொண்டிருந்தாலும், அந்த இலட்சியம் நிறைவேறுகிற வரையில் நாம் வெளியிலிருந்து தருவித்துத்தான் ஆகவேண்டும். அதற்கு முடிந்த முயற்சிகளெல்லாம் செய்துவருகிறோம்."

'தொகுதியில் இருந்து பணியாற்றுங்கள்'

"சென்னை நகரில் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்துக்குட்பட்ட வீடுகள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒதுக்கித் தர வசதி செய்து தரப்படுமா?"

—சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர்

"சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவர் தொகுதியில் இருந்துகொண்டு வேலைசெய்ய வேண்டியவர்கள் ஆவார்கள். அவர்களுக்குத் தங்கள் தொகுதியில் வீடு இருக்கும். சென்னை நகரிலும் அவர்களுக்காக வீடு ஒதுக்க இயலாது"

—அமைச்சர் சாதிக் பாட்சா

(சட்டமன்ற நிகழ்ச்சி)

தமிழக நிதிநிலை அறிக்கை

என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் வரவேற்பு

"1968—69-ம் ஆண்டு தமிழக நிதிநிலை அறிக்கையில் நாங்கள் எதிர்பார்த்ததுபோல், மதுரை நகரத்திலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளான பறங்கிமலை, பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், அம்பத்தூர், வில்லிவாக்கம், ஆவடி, மாதவரம் ஆகிய இடங்களிலும் பணிபுரியும் தமிழக அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப் படி வழங்கியதற்காக தமிழக அரசை—அதன் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களை உளமாரப் பாராட்டுகிறோம்; எங்கள் நன்றியை உரித்தாக்குகிறோம்; ஆனால் 1-3-68 முதல் வழங்குவதற்கு மாறாக 1-10 67 முதல் வழங்குவதற்கான வழி வகை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்"

என்று, தமிழக அரசிதழ் பதிவு பெறாத ஊழியர் சங்கத் தலைவர் திரு. வி. தேவநாதன் அறிவிக்கிறார்.

காதில் விழுந்தது !

"கொஞ்ச நாட்களுக்கு முன்பாகத்தான் பேசிக் கொண்டோம்— நினைவிருக்கிறதா?"

"எதைச் சொல்லுகிறாய்?"

"அதற்குள்ளாகவா மறந்துவிட்டாய்? 'என்ன

இருந்தாலும் நமது தலைவர் முறை வேறு–பாதை வேறு; சுப்பிரமணியம் முறை வேறு–பாதை வேறு' என்று சொன்னேனே, இப்போது நினைவு வருகிறதா?"

"ஆமாம்; இப்போது அதற்கு இன்னொரு ஆதாரம் கிடைத்திருக்கிறது? சும்மாவா நம்ம காங்கிரசில் சொல்லுகிறார்கள்-- உன்னை ஒரு 'காமராசர் ஆள்' என்று! வரவர நீ காமராசரை கட்சியிலிருந்து ரொம்பத் தூரம் விலக்கிக் கொண்டு போகிறாய்!"

"விலக்குவது நான் இல்லை அய்யனே! நமது கட்சி தான் அவரிடமிருந்து விலகுகிறது! அதற்கு இப்போது ஓர் உதாரணம் கேள்— சொல்லுகிறேன்; மதுரையில் தனியார் பயிற்சிக் கல்லூரி ஒன்றைத் திறந்து வைத்து இன்றையத் தமிழ்நாடு காங்கிரசை - அதாவது நமது கட்சியை-தாக்கியிருக்கிறார் பார்--அப்பப்பா!"

"வர வர நீ விபரீதமாகப் பேசுகிறாய்; அவ்வளவுதான் சொல்லுவேன்!"

"காமராசர் பாதையில் நான் போகிறேன்; அதனால் காங்கிரசு என்னை விலக்கினால் பரவாயில்லை. அது போகட்டும்; அவர் பேசியதைச் சொல்லவில்லையே! "இப்போதெல்லாம் அரசியல் தலைவர்கள், 'போராட்டம், போராட்டம்' என்று தேடிப்போகிறார்களே தவிர, மக்களின் நன்மையைத் தேடிப்போவதில்லை" என்று பேசியிருக்கிறார்! அது மட்டுமா—இன்னும் கூறுகிறார் கேள்; 'அரசியல் தலைவர்கள் இது போன்ற ஆரவாரங்களிலெல்லாம் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளாமல் மக்களை அமைதிச் சூழ்நிலையில் வாழ வழிவிட வேண்டும்' எனவும் வேண்டியிருக்கிறார்!"

"ஆமாம்; அதனால் 'தமிழ்நாடு காங்கிரசைத் தாக்கிப் பேசியிருக்கிறார்' என்று நீயாகக் கற்பனை செய்து கொண்டாயா?"

"அப்படிக் கேள், சொல்கிறேன்; இப்போது ஆங்காங்கே சில இடங்களில் கறுப்புக் கொடிப் போராட்டம் நடைபெறுகிறதாமே— அதை நடத்துவது யார்?"

"நமது மண்டலக் காங்கிரசுதான்! 'படி அரிசி கேளுங்கள்' எனக் கிராம பின்னரும், 'எப்படி எதிர்க் கட்சியாக நடப்பது என்றும் சிந்திக்கவில்லை— ஏன் எதிர்க் கட்சியானோம்' என்றும் நினைத்துப் பார்க்கவில்லை! வீணான ஆரவாரம் மக்களைத் தூண்டிவிட்டு, பானை கட்டச் சொல்லுவது யார்?"

"அதுவும் நமது கட்சியில் உள்ள சில சுறுசுறுப்பாளர்கள்தான்!"

"'சனநாயகப் பாதுகாப்புத் தினம்' கொண்டாடச் சொல்லி சுற்றறிக்கை அனுப்பியது யார்?"

"புதிய தலைவர் சுப்பிரமணியம்தான்!"

"இரத்தம்–உயிர்–சிறைத் தண்டனை—என்று ஒருவர், நான்கு அறைகளுக்கு மத்தியிலேயே இருந்துகொண்டு கீழ்த்தரப் போராட்ட உணர்ச்சிகளைத் தூண்டித் தூபமிட்டுக் கொண்டிருக்கிறாரே—அது யார்?"

"நமது கட்சிக்கு வந்தவர் தான்!"

"இப்போது நான் இத்தனைக் கேள்விகள் கேட்டேன்; நீயும் பதில் சொன்னாய்; இந்தப் பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றிலாவது காமராசர், இவர்களுக்கு ஆதரவாக ஒரு வார்த்தை பேசியிருக்கிறாரா?"

"ஆமாம்; நானும் நினைத்துப் பார்க்கிறேன்—அப்படி ஒன்றும் வாய் திறந்திருப்பதாகவே தெரியவில்லையே!"

"அவர் எப்படி திறப்பார்? மனம் நொந்தவரின் வாய், எப்படிப் பேசும்? அதனால் தான், இப்படி ஏதாவது ஒருதடவை அனைத்தையும் சேர்த்துவைத்துப் பேசிவிடுகிறார்! எதிர்க் கட்சியாக ஓராண்டு ஆகிவிட்ட—'போராட்டம்' என்ற வேதனைமிக்க பேச்சு—அதனால்தான் இப்படிக் கண்டித்திருக்கிறார், காமராசர்; 'சுப்பிரமணியமும் காமராசரும் ஒத்துப் போகவில்லை' என்று மற்றக் கட்சிக்காரர்கள் எழுதும்போதும் பேசும்போதும்தான் நமது கட்சிக்காரர்களுக்குக் கோபம் வருகிறதே தவிர, அதற்கான காரணம் என்ன என்பதை நம்மவர்கள் சிந்திக்கவில்லை!"

"சரி; நீ சொல்லுவதை ஒத்துக் கொள்கிறேன்; அதற்காகக் காமராசர், இப்படி மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி சுப்பிரமணியத்தின் தலைமைக்கும்—தனக்கும் உள்ள வேறுபாட்டைப் பிரச்சினையாக்குவதா? கட்சிக்குள்ளேயே பேசி, குறைகளைப் போக்கக் கூடாதா?"

"இந்த இடத்தில்தான் எனக்கும் சந்தேகம் பிறக்கிறது; என்ன செய்வது— அவரும் ஒரு அரசியல்வாதி தானே! சுப்பிரமணியத்தை ஒதுக்குவதற்குத் திட்டம் போட்டு, இப்படியெல்லாம் கண்டும் காணாததுபோல்

பேசி, கட்சியில் ஆதரவு சேர்க்க முயற்சிக்கிறாரோ, என்னவோ!"

"ஆமாம் ... இருக்கும் ... நீ சொல்லியதுபோல் அவரும் ஒரு அரசியல்வாதி தானே!"

—எஸ். ஆர்.

மணல்மேடு கூட்டுறவு நூற்பாலை

மொழித் தகராறு பற்றி அமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 5—

"மாயூரம் வட்டம் மணல்மேட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலையில், 28—11—67-ல் நிர்வாகத்தினர் 11 பேருக்கு 'லே-ஆப்' கொடுத்தார்கள்; அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்தனர்; அதைத் தொடர்ந்து தகராறு ஏற்பட்டு, பின்னர், 141 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்; அவர்களில் இப்போது 61 பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது; வழக்கில் உள்ள 9 பேர் தவிர மற்றவர்களும் வேலைக்கு வர விரும்பினால் சேர்த்துக்கொள்ளப்படுவர்"

என்று, கூட்டுறவுத்துறை அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

கடலரிப்பைத் தடுக்க ரூ. 20 இலட்சம் செலவில் திட்டம்

நான்காம் திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் இல்லை

சென்னை, மார்ச் 5—

"தமிழ்நாட்டில் கடலரிப்பைத் தடுத்துக் கரைகளைப் பாதுகாப்பதற்காக ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் உருவாக்கி அதை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டிருக்கிறோம். அதற்கு இன்னும் ஒப்புதல் கிடைக்கவில்லை. அமெரிக்க நிபுணர் ஒருவர்கூட வந்து நமது கடற்கரைகளை ஆராய்ந்து அறிக்கையொன்றை அளித்திருக்கிறார். அதையெல்லாம் முன்னிட்டுத்தான் ரூ 20 இலட்சம் செலவிடத் திட்டம் வகுத்துள்ளோம்"

என்று, பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"கொளச்சல் துறைமுகத்திலும் அனதச் சுற்றியும் அடிக்கடி கடல் அரிப்புகள் ஏற்படுவதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?"

என்று திரு. ஏ. சிதம்பரநாத நாடார் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அதுபற்றிக் குறிப்பிட்டதாவது:—

"கடந்த 29—6—67-ல் மாவட்டக் கலெக்டரும் மேற்பார்வைப் பொறியரும் அங்கு சென்று பார்த்தபோது, அங்கு கடலரிப்பு இல்லை என்றுதான் தகவல் தரப்பட்டுள்ளது"

இராமச்சந்திர துரை (காங்):—"காங்கிரசு ஆட்சிக் காலத்தில், இராமேசுவரம் பகுதியில் கடலரிப்பைத் தடுக்கவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டது; இப்போதும் இராமேசுவரத்தில் புயலடித்திருக்கிறது; தி. மு. க. ஆட்சியினர் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?"

அமைச்சர்:—"மாண்புமிகு உறுப்பினர், தங்கள் கட்சியின் ஆட்சி இருந்த காலத்திலேயே இப்பொழுது காட்டும் அக்கறையைக் காட்டி முன்கூட்டியே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கலாமே!"

கேள்வி:—"தி. மு. க. அறிக்கையில், 'கடலரிப்பைத் தடுக்கச் சுவர் எழுப்பப்படும்' என்று கூறியிருக்கிறார்களே—அதை இப்போது நிறைவேற்றுவார்களா?"

பதில்:—"கடல் அரிப்பைத் தடுப்பது என்றால் கடற்கரை எவ்வளவு நீளம் இருக்கிறதோ அவ்வளவு நீளத்துக்கும் சுவர் எழுப்புவது அல்ல; 'பயங்கரமாகப் பாதிக்கப்படும்' எனக் கருதப்படும் பகுதிகளுக்குத்தான் சுவர் எழுப்பவேண்டும். அந்தக் கொள்கையிலிருந்து நாங்கள் இப்பொழுதும் பின்வாங்கவில்லை."

மதுரையைமாநகராட்சியாக்கும் எண்ணம் இல்லை

மக்கட் தொகை--வருவாய் அடிப்படையில் நகராட்சிப் பிரிவுகள்

சட்டமன்றத்தில் அமைச்சர் முத்துசாமி விளக்கம்

சென்னை, மார்ச் 4—

"தமிழகத்தில் முதல் நிலை நகராட்சிகள் பதினைந்தும், இரண்டாம் நிலை நகராட்சிகள் பதினெட்டும், மூன்றும் நிலை நகராட்சிகள் நாற்பத்து நான்கும், நகரியக் குழுக்கள் நான்கும் உள்ளன; மேலும், தமிழகத்தில் தேர்வு நிலை நகராட்சிகள் ஐந்தும், சிறப்பு நிலை நகராட்சிகள் இரண்டும் உள்ளன.

"நகராட்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கும் மீண்டும் வகைப்படுத்துவதற்கும் உரிய அளவீட்டு முறை வருமாறு:—

1. மூன்றும் நிலை நகராட்சிகள்:— மக்கட் தொகை 35,000-க்கும் குறைந்திருந்து 1,00,000 ஆண்டு வருவாய் உள்ள ஒரு நகராட்சி.

2. இரண்டாம் நிலை நகராட்சிகள்:—மக்கட் தொகை 35,000 முதல் 50,000-வரையில் இருந்து, ரூ. 3,50,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சி; அதாவது, தனி நபர் வருமானம் ரூ. 10-க்கு மேற்பட்டுள்ள ஒரு நகராட்சி.

3. முதல் நிலை நகராட்சிகள்:— மக்கட் தொகை 50,000 முதல் 1,00,000-வரையில் இருந்து, ரூ 7,50,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சிகள்; அதாவது, நபர்வாரி வருமானம் ரூ. 15-க்கு மேற்பட்டுள்ள ஒரு நகராட்சி.

4. தேர்வு நிலை நகராட்சிகள்:— மக்கட் தொகை 1,00,000 முதல் 2,50,000-வரையில் இருந்து, ரூ. 20,00,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சி; அதாவது, நபர்வாரி வருமானம் ரூ. 20-க்கு மேற்பட்ட ஒரு நகராட்சி.

5. சிறப்பு நிலை நகராட்சிகள்:— 2,50,000-க்கு மேற்பட்ட மக்கட் தொகை இருந்து, ரூ. 75,00,000-க்கு மேற்பட்ட சாதாரண ஆண்டு வருவாய் உள்ள ஒரு நகராட்சி; அதாவது, நபர்வாரி வருமானம் ரூ. 30-க்கு மேற்பட்டுள்ள ஒரு நகராட்சி."

மேற்கண்ட தகவல்களை, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி சட்டமன்றத்தில், திரு. வி. கே. கோதண்டராமன் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பல துணைக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"1961-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கட் தொகைக் கணக்கின் அடிப்படையிலேயே நகராட்சிகளின் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

"1952-ம் ஆண்டில் நகராட்சிகள் மூன்று தரமுள்ளவையாகப் பிரிக்கப்பட்டன; 1963-ல் சிறப்பு நிலை நகராட்சிகளும், தேர்வு நிலை நகராட்சிகளும் பிரிக்கப்பட்டன.

"மதுரை நகராட்சியை மாநகராட்சியாக்கும் எண்ணம் தற்போது இல்லை."

தமிழில் தந்தி அனுப்ப வசதி

டில்லியிடம் தமிழக அரசு வற்புறுத்தும்

சென்னை, மார்ச் 5—

"தமிழ்நாட்டிற்குள் அனுப்பப்படும் தந்திச் செய்திகளைத் தமிழில் அனுப்பும் முறையினைச் செயல்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?'

என்று இன்று சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் திரு. பெ. மலைச்சாமி கேட்டார்.

இதற்குப் பின்வருமாறு பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி விடையளித்தார்:—

"இந்த அரசு இந்திய அரசுக்கு 1960-ல் எழுதியது; அதனால் பல வகை சிக்கல்கள் ஏற்படும் என்றும், மற்ற மொழிக்காரர்களும் இதே வசதிகளைக் கேட்பார்கள் என்றும், ஏற்கனவே உள்ள வசதியான முறைப்படி ரோமன் எழுத்தில் தமிழ்ச் சொற்களை எழுதி தந்தி அனுப்பலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது."

மலைச்சாமி:—"மீண்டும் மத்திய அரசுக்கு இந்த அரசு வலியுறுத்துமா?"

அமைச்சர்:—"தமிழகத்திற்குள் அனுப்பப்படும் தந்திகள் தமிழில் அனுப்பப்படுவதில் அதிகத் தொல்லை விளையாது என்பதால், அதை வலியுறுத்த இந்த அரசு வழி செய்யும்."

தரங்கம்பாடிக்குக் குடிநீர்த் திட்டம்

முன்னாள் துணையமைச்சர் உறுதிமொழி என்ன ஆயிற்று?

சென்னை, மார்ச் 5—

"தரங்கம்பாடியில் குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றக் கோரி பொதுமக்களிடமிருந்தும், நகராட்சி மன்றத்திலிருந்தும் 1967 ஏப்ரல் மாதத்தில் விண்ணப்பங்கள் வந்தன; நிதிப் பற்றுக்குறை காரணமாகத் தற்போது அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் யோசனை இல்லை"

என்று, மருத்துவத்துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, சட்டமன்றத்தில் கழக உறுப்பினர் எஸ். கணேசனின் கேள்விக்குப் பதிலளித்தார்.

எஸ். கணேசன்:—"அந்தத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அரசின் துணையமைச்சராகவும் இருந்தவர், தொகுதி மக்களிடம் குடிதண்ணீர் திட்டத்துக்கு மத்திய அரசிடம் அனுமதி பெற்றுத் தருவதாக உறுதிமொழியளித்திருந்ததாகக் கூறப்படுகிறது; அதன்படி, மத்திய அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா?"

அமைச்சர்:—"மத்திய அரசிலிருந்து அப்படியொன்றும் தகவல் வரவில்லை."

வேதாரண்யம்காட்டில் வன ஆராய்ச்சிநிலையம்

ந. தர்மலிங்கம் யோசனை— அமைச்சர் பதில்

சென்னை, மார்ச் 5—

"தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம், கோடிக்கரைக் காடுகள் மிகவும் புகழ் பெற்றவை. அங்கு மான், குதிரை, முரட்டுக் குணமுடைய காளைகள் நிரம்ப இருக்கின்றன; எனவே, அந்திப் பகுதியையொட்டியே இடும்பாவனம், தொண்டியங்காடு, தில்லைவிளாகம் ஆகிய இடங்களில் வனத்துறை ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படுமா?"

என்று கழக உறுப்பினர் ந. தர்மலிங்கம், சட்டமன்றத்தில் கேட்டார்.

"அதுபற்றி யோசிக்கலாம்" என்று பதிலளித்தார்—வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி.

கச்சத் தீவு இந்தியாவுக்கே சொந்தம்

உறுதிப்படுத்த மத்திய அரசுக்குத் தமிழக அரசு உதவும்

இராமநாதபுரம் இராஜாவின் மூலம் சான்றேடுகள் சேகரிப்பு

சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, மார்ச் 6—

தமிழ் நாட்டுக்குச் சொந்தமாக இருந்துவரும் கச்சத் தீவின்மீது இலங்கை அரசு உரிமை கொண்டாடி வருவதால்' இவ்வாண்டு 13—3—68 அன்று அந்தத் தீவில் நடைபெறவிருக்கும் அந்தோணியார் கோயில் திருவிழாவுக்குத் தமிழ் நாட்டிலிருந்து மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்படுமோ என அஞ்சப்படுவதால் அதுபற்றி விவாதிக்க வேண்டும்"

என்று கோரி, இன்று சட்டமன்றத்தில் சுதந்தரா கட்சி உறுப்பினர் சீமைச்சாமி ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்தார்.

இதுபற்றி அவை முன்னவர் இரா. நெடுஞ்செழியன் அளித்த விளக்கம் வருமாறு ;—

"கச்சத் தீவை இலங்கை அரசு கைப்பற்றியுள்ளதாகக் கூறப்படும் இந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டிய முழுப் பொறுப்பும் மத்திய அரசுக்கே உண்டு. ஆனாலும், அது தமிழ்நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியாகவும், இராமநாதபுரம் இராஜாவுக்குச் சொந்தமாகவும் இருந்திருக்கிறது என்பதை மெய்ப்பிக்கப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

"அந்தத் தீவுமீது எழுந்த வழக்கொன்றில் இராமநாதபுரம் இராஜாவுக்குச் சாதகமாகவே தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய சான்றேடுகளையெல்லாம் தருவதாக இராமநாதநரம் இராஜாவும் வாக்களித்திருக்கிறார்; அதன்மூலம் தக்க பலன் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

"கச்சத் தீவு பற்றி நாடாளுமன்றத்தில் பதிலளித்த மத்திய அமைச்சர்கூட, இந்தப் பிரச்சினை குறித்துத் தமிழக அரசிடம் விவரம் சேகரித்துக் கொடுக்குமாறு கேட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்;எனவே தமிழக அரசு அந்த விவரங்களையெல்லாம் அனுப்பத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதுபற்றி மேலும் இங்கு விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

அமைச்சரின் விளக்கத்துக்குப் பின், தமது தீர்மானத்தை வற்புறுத்தவில்லை என்று திரு. சீமைச்சாமி தெரிவித்தார்.

சித்தமருத்துவ நூல் வெளியீட்டு விழா

திரு. எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை தொகுத்த 'அகால மரண நூல்' என்ற சித்த மருத்துவ நூல் வெளியீட்டு விழா 7—3—68 மாலை 7 மணிக்கு எஸ்பிளனேடு ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றத்தில் நடைபெறும்; மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமைதாங்குவார்; தலைமை மாகில மாஜிஸ்திரேட் திரு. வி. பலராமையா நூலை வெளியிடுவார்; திரு. கே. சிதம்பரம் வாழ்த்துரை வழங்குவார்.

கைத்தறிப் பொருட்காட்சி

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சார்பில், சென்னை — எழும்பூர் பாந்தியன் சாலையில் நடைபெறும் பொருட்காட்சியில், 7—3—68 மாலை 6 மணிக்கு பொதுச் சுகாதாரத் துறை அமைச்சர் எஸ்.ஜே சாதிக் பாட்சா தலைமையில், திரு. பி. கே. மூக்கையா தேவர் எம்.எல்.ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்; இரவு 7 மணிக்கு 'ஜீவனாம்சம்' என்ற நாடகம் நடைபெறும்.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

மார்ச் 9 மாலை 5-மணி: காஞ்சிபுரம்—பச்சையப்பன் கல்லூரி மாணவர் மாநாடு; முத்தமிழ் விழா; 6-மணி: கைத்தறி வார விழா.

மார்ச் 10 காலை 11-மணி: குள்ளமுடையானூர்; பிற்பகல் 3-மணி: சேலம்—தமிழ் நாடு மண்வளப் பாதுகாப்பு துணை உதவியாளர்கள் சங்க மாநாடு; இரவு 7-மணி: கைத்தறி வார விழா.

மார்ச் 11 காலை 10-மணி: அருப்புக்கோட்டை—கால்நடை மாநாடு.

புலவர் அறிவுடைநம்பி

சுற்றுப்பயணம்

மார்ச் 7, 8: நாகர்கோவில்; 9 திருவில்லிபுத்தூர்; 10: திருவாரூர், புலிவலம்; 11: பம்மல், சைதை; 14, 15: உடுமலை வட்டம்.

கஞ்சத்தனமும் படுகஞ்சத்தனமும்!

சென்னை, மார்ச் 6—

"அரசுப் போக்குவரத்து ஊழியர்களுக்குப் போதிய படித் தொகை கொடுக்கப்படாததால் அவர்கள் அதிருப்தியுடன் வேலை செய்வதால்தான் விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன; அவர்களுக்கு 'பேட்டா' தொகையில் 10 காசு உயர்வு கொடுத்தது, 'கஞ்சத்தன'மாக இருப்பதால், மேலும் அதிக அளவில் கொடுக்க அரசு முன்வர வேண்டும்"

என்று, இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில் காங்கிரசு உறுப்பினர் கே. விநாயகம் கோரினார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் கூறியதாவது:—

"பத்துக் காசு உயர்வு கொடுத்ததை, 'கஞ்சத்தனம்' என்கிறார் மாண்புமிகு உறுப்பினர்; இந்தப் பத்துக் காசு உயர்வும் முன்பிருந்த அரசு கொடுக்காதிருந்ததே—அதை எப்படிச் சொல்லுவது? அது, 'படுகஞ்சத்தனம்' அல்லவா?

"அதிருப்தியால்தான் விபத்துக்கள் அதிகரிப்பதாக திரு. விநாயகம் கூறினார்; இந்த அரசு பதவியேற்ற பின், 6—3—67 முதல் 1—6—67 வரையுள்ள மூன்று மாத காலத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் 184-தான்; ஆனால், அதற்கு முந்திய ஆண்டில் அதே காலத்தில் ஏற்பட்ட விபத்துக்கள் 285 என்பதை உறுப்பினருக்குச் சுட்டிக்காட்டுகிறேன்; அப்போது எதனால் இவ்வளவு விபத்துக்கள் நடந்தன என்பதை அறிய விரும்புகிறேன்."

அஞ்சலகத்திலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காக, அதிகமாகத் தேவையுள்ளவர்களின் அளவு வெட்டப்படுகிறது!

நாசிக் அச்சகத்துக்கு நிலைமையைத் தெரிவித்து அதிகாரிகள் 'தந்தி' கொடுத்துள்ளனராம். சென்னையிலேயே உள்ள மற்ற பெரிய நிலையங்களிலிருந்து தற்காலிகமாக 'சப்ளை' பெறலாமென முயற்சித்ததும் தோல்வியில் முடிந்திருக்கிறது! ஏனெனில், அங்கேயும் அதே பற்றாக்குறை நிலைமைதான் இருந்துவருகிறது!

[அஞ்சல் அட்டை — பணவிடைத் தாள்—அஞ்சல் தலைகள் போன்றவைகளில் இப்படி அடிக்கடி பற்றாக்குறை நிலைமை ஏற்படுவதைப் பற்றிய விமர்சனக் கட்டுரையொன்று 'நம் நாடு' 29—2—68 இதழில் வெளிவந்திருப்பதனை இங்கு நினைவூட்டுகிறோம்.]

கைத்தறி பொருட்காட்சி 10%

34. பாந்தியன் சாலை எழும்பூர், சென்னை-8.

விசேஷ தள்ளுபடி

நிகழ்ச்சி நிரல்

7—3—1968 வியாழன்

மாலை 6.00 மணி தலைவர்: திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா பி.ஏ.பி.எல்., பொது சுகாதாரத்துறை அமைச்சர்

பேச்சாளர்: திரு. பி. கே. மூக்கையா தேவர் எம்.எல்.ஏ., சட்டமன்ற சுதந்திரா கட்சித் தலைவர்

மாலை 7.00 மணி நாடகம்: 'ஜீவனாம்சம்'—சேவா ஸ்டேஜ் நாடக சபா

8—3—1968 வெள்ளி

மாலை 6.00 மணி தலைவர்: திரு. ஏ. அழகிரிசாமி எம்.ஏ.பி.எல்., நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம்

பேச்சாளர்: திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி.,

மாலை 7.00 மணி நாடகம்: 'ஃபாரின் பாலிஸி'—ரஜினி என்டர்டெய்னர்ஸ்

9—3—1968 சனி

மாலை 6.00 மணி தலைவர்: திரு. மா. முத்துசாமி பி.ஏ.பி.டி., உள்ளாட்சித்துறை அமைச்சர்

பேச்சாளர்: திரு. மு. ரா. பெருமாள் முதலியார் எம்.ஏ.எல்.டி., நெறியாளர், தமிழ் வளர்ச்சித்துறை

மாலை 7.00 மணி நாடகம்: 'மாவிளக்கு'—கன்னையா கலைக்குழு

10—3—1968 ஞாயிறு

மாலை 6.00 மணி தலைவர்: திரு. பி. ஜி. கருத்திருமன் பி.எஸ்ஸி., எம்.எல்.ஏ., சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர்

பேச்சாளர்: திரு. கே. விநாயகம் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.

மாலை 7.00 மணி நாடகம்: 'மனோன்மணி' (சமூக நாடகம்)— தேவராஜன் நாடக மன்றம்

கண்காட்சி நேரம் தினசரி மாலை 3 மணியிலிருந்து 10 மணி வரை — அனுமதி இலவசம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்ற—'தெரிந்தும் தெரிந்திராத' உண்மையையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார்!

தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்குத் தரப்பட்டிருக்கும் சிறப்பான சலுகைகள், எஸ். எம். துரைராஜ் பேச்சில் நன்றிப் பெருக்குடன் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது; 'பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலை உயர்ந்தாலே சமுதாயத் தாழ்வுகள் மறைந்துவிடும்' என்று அவர் கூறியிருப்பது, அனைவருக்கும் உடன்பாடான கருத்துத்தான்!

தமிழக நிதிநிலை அறிக்கைக்குப்பின் வந்த மைசூர் நிதி நிலை அறிக்கையினைக் காட்டி, 'அங்கேயும் தான் உபரி—அதுவும் அதிகமாக' எனச் சொல்லுவதற்குத் துடிக்கும் காங்கிரசுக்காரர்களுக்கு, 'அங்கே உபரிதான்; ஆனால், மதுவிலக்கை எடுத்ததன் பயனாக'—என்று 'சூடான' பதில் ஒன்றைத் தந்திருக்கிறார்—புலவர் முருகையன்.

"திருவையாறு பகுதிக்கு வரித் தள்ளுபடி தேவை" என்று—அங்கே விளைச்சல் தோல்வியடைந்த நிலைமையினைக் காட்டி, கோரிக்கை ஒன்றினையும் அவர் தந்திருக்கிறார்!

"கழகம் ஆட்சிக்கு வந்தபோது, இந்த மாநிலத்தின் நிதிநிலை இருந்த நிலைமையில் வந்துள்ள உபரி 'பட்ஜெட்'டினை, 'புரட்சிகரமானது' என்று அழைப்பதில் தவறென்ன இருக்க முடியும்?" எனக் கேட்டிருக்கிறார்—வி. டி. அண்ணாமலை.

"வைகையாற்றில் இரண்டாவது அணையும், நிலக்கோட்டைப் பகுதிக்கு கால்வாய் வசதியும் தேவை" என கேட்டிருக்கிறார் ஏ. முனியாண்டி.

★

புதிய அரசின் சாதனைகளில் குற்றம் குறை காண முடியாத காங்கிரசு உறுப்பினர்கள், இன்னும் தங்கள், 'பழம்பெருமை' பற்றியேதான் பேசுகின்றனர்! 'பழம் பெருமை' போதவில்லை என்பதனால்தான் அவர்கள், பதவியிலிருந்து அகற்றப்பட்டார்கள்! அதனை மறந்து, 'நாங்கள் இவைகளையெல்லாம் ஏற்படுத்தி வைத்ததனால்தானே நீங்கள் இப்போது ஆட்சி செய்கிறீர்கள்?' என்ற போக்கில் அவர்களில் சில உறுப்பினர்கள் பேசியிருப்பது, 'என்னுடைய மகன் பிறந்திருந்ததனால் தானே நீ இந்த வீட்டுக்கு மருமகளாய் வந்தாய்?' என்று ஆண்டுகள் பல கடந்தும் கேட்கும் மாமியாரின் மன வளத்தைத்தான் காட்டுகிறது!

இரயில்வே ஊழியர் மீது இந்தித் திணிப்பு

நாடாளுமன்றத்தில் தி.மு.க. எதிர்ப்பு

அமைச்சர்--கழக உறுப்பினர்கள் வாக்குவாதம்

"பயிற்சிக் காலத்தில் இரயில்வே அதிகாரிகள், ஓர் இந்திய மொழியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டியது அவசியம்" என்று கூறும் இரயில்வேத் துறையின் சுற்றறிக்கை பற்றி மக்களவையில் இரயில்வேத் துறை அமைச்சர் புனச்சாவுக்கும்—தி.மு. கழக உறுப்பினர்களுக்குமிடையே கடும் வாக்குவாதம் நடைபெற்றது.

இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில் அமைச்சர், "'இரயில்வே போன்ற அனைத்திந்தியப் பணிக்கு ஓர் இந்திய மொழியில் அனுபவ அறிவு இருக்க வேண்டும்' எனக் கூறும் சுற்றறிக்கை 1946-ல் வெளியிடப்பட்டது" எனக் கூறிவிட்டு, 'இந்தச் சுற்றறிக்கையின்படி உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடத் தரத்துக்குச் சமமான மொழி அறிவு இருந்தால் போதும்; தி.மு. கழக உறுப்பினர் ஒருவர் கூறியதுபோல், எம்.ஏ.-க்குச் சமமான அறிவு பெற்றிருப்பது கட்டாயமில்லை' எனக் கூறினார்.

அமைச்சர் இப்படிக் கூறியதை, கழக உறுப்பினர் செ. கந்தப்பன் எதிர்த்தார்; "நடைமுறையில் ஏன், 'பிரவீன்' வகுப்புக்குச் சமமாக இந்தியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்' எனக் கூறப்படுகிறது?" என வினவினார்; 'பயிற்சிக் காலத்தில் இந்தியைப் படிக்கும்படி அதிகாரிகளிடம் கூறலாமே; வேலையில் சேருவதற்கு அதை ஒரு முன் நிபந்தனையாக்குவது மத்திய அரசு அளித்துள்ள வாக்குறுதிகளுக்கு முரணானதல்லவா?' என்றும் அவர் சுட்டிக்காட்டி வினவினார்.

"சுற்றறிக்கையில் மாறுதலைச் செய்ய வேண்டியது இரயில்வேக்கள் அல்ல; இரயில்வேக்களுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் மத்திய அரசு அலுவலர் தேர்வுக் குழுவாகும்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--3--68

அந்தியூர்

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: கே. பி. பரமேசுவரன்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, எஸ். ஆர். பொன்னுசாமி, பி.ஏ.பி.எல்., இரா. செங்குட்டுவன், சிவ. நடராசன், அ. க. துரைராசு, அ. வெற்றிவேல், சுப்பிரமணியம், அ. ச. மஜீத், மற்றும் பலர்.

முத்துப்பேட்டை

கே.வி.கே. சாமி நினைவு மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு இரயில்வேத் திடலில்; தலைவர்: மா. கோவிந்தன்; பேசுவோர்: வெ. கண்ணன், சு. நாவலர்நம்பி, மற்றும் பலர்.

நன்றியறிவிப்புக் கூட்டம்

சென்னை—ஆசிரியர் நலன் விழைவு மன்றச் சார்பில் பேராசிரியர் க. அறிவழகன் எம்.ஏ.,எம்.எல்சி. தலைமையில் 7—3—68 மாலை 5-மணியளவில் மயிலாப்பூர் பாலஸ் சாலை, சாந்தோம் ஸ்டெல்லா மெச்சுப் புனா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் சிறப்புக் கூட்டம் நடைபெறும்; திரு. மரியப்பிரகாசம், புலவர் வேதா ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.